Koviloor Digital Library

3/2







உ



தில்லைத் தமிழ் மன்றம்

கனகசபை நகர், சிதம்பரம்

3163
Q23

விநாயகர் அகவல், கந்தர் கலிவெண்பா, சிவபுராணம்

(மூலம்)

ACC. NO. 3163

வெளியிடுவோர் :

தில்லைத் தமிழ் மன்றத்தார்

அன்பளிப்பு :

S. திருநாவுக்கரசு

Koviloor Digital Library

Koviloor Digital Library

3/2

உ

திருச்சிற்றம்பலம்

முன்னுரை



சைவ சித்தாந்த சாத்திரநூல்களையும், தோத்திர நூல்களையும் பல்லோரும் படித்தும் கேட்டும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் 1972-ம் ஆண்டு தில்லைத் தமிழ் மன்றம் நிறுவப்பெற்றது. இம் மன்றத்தை நிறுவிய தலைவர் திரு R. கனகசபைப் பிள்ளை அவர்கள், திருக்கயிலாய பரம்பரை, தருமையாதீனம் இருபத்தி ஆறும் பட்டத்தில் எழுந்தருளியுள்ள குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களை சிதம்பரத்தில் கனகசபை நகரில் அமைந்துள்ள தருமபுர மடாலயத்தில், தில்லைத் தமிழ் மன்றத்தின் சார்பில் திருமுறை வகுப்பு நடத்துவதற்கு இடமளித்து உதவ வேண்டுமென்று கேட்டபோதில், இடந் தந்தருளினார்கள்.

அதுமுதல், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை துணைப்பேராசிரியருமான திரு க. வெள்ளைவாரணனார் அவர்களால் திருமந்திர வகுப்பும், அதைத்தொடர்ந்து பெரியபுராண வகுப்பும் வாரம் தோறும் வியாழக்கிழமையில் மாலை 7-மணி முதல் 8-மணி வரை நடந்து வருகிறது. "திருமந்திர அருள்முறைத்திரட்டு" என்ற நூலையும் (உரையுடன்) தில்லைத் தமிழ் மன்றத்தார் 1973-ல் வெளியிட்டனர். காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் உமாபதி சிவாசாரியார் அருளிய "சிவப்பிரகாசம்" என்ற

Koviloor Digital Library

நூலுக்கு 15 நாட்கள் தொடர் விரிவுரை நிகழ்த்தினர்கள் (26-6-73 முதல் 6-7-73 முடிய) தருமையாதீனப் புலவர் காஞ்சிபுரம் திரு அருணைவடிவேலு முதலியார் அவர்கள் மெய்கண்டார் அருளிய "சிவஞானபோதம்" என்ற நூலுக்கு (10-12-75 முதல் 24-12-75 முடிய) 15 நாட்கள் தொடர் விரிவுரை நிகழ்த்தினர்கள்.

தோத்திர நூல்களையும் பொருள் உணர்ந்து தினந்தோறும் பாராயணம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் இப்போது 24-6-76 முதல் 30-6-76 முடிய 7 நாட்கள் விநாயகர் அகவல், கந்தர்கலிவெண்பா, சிவபுராணம் ஆகிய நூல்களில் விரிவுரை செய்வதற்கு தருமையாதீனப் புலவர் மகாவித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ. அவர்களும் நமது அழைப்பிற்கு இணங்க இசைந்துள்ளார்கள். பாடம் கேட்கும்போது அதற்குரிய மூலமும் இருக்கவேண்டுமென்ற நோக்கத்தில் விநாயகர் அகவல், கந்தர்கலிவெண்பா, சிவபுராணம் ஆகிய மூன்றும் அடங்கிய நூலை தில்லைத் தமிழ் மன்றத்தின் சார்பில் வெளியிடுகிறோம்.

மன்றத்தின் சார்பில் தங்கள் ஆதீனத் திருமடத்தில் இடந் தந்தருளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும் வாரந்தோறும் திருமுறை வகுப்பினை நடத்திக் கொடுத்துவரும் திரு வெள்ளைவாரணனர் அவர்கட்கும், மன்றத்தின் அழைப்பிற்கிணங்க தில்லையில் விரிவுரை நிகழ்த்தவந்த பெரியோர்கட்கும், தற்போது விரிவுரை ஆற்றவரும் பேராசிரியர்கட்கும், தில்லைத் தமிழ் மன்றத்தின் நற்பணிகளுக்கு ஆதரவு அளித்துவரும் சைவப் பெரியவர்களுக்கும் எங்கள் நன்றியுரியதாகும்.

இப்படிக்கு

தில்லைத் தமிழ் மன்றத்தார்

கனகசபைநகர்

சிதம்பரம்
19-6-76

Koviloor Digital Library

உ

ஒளவையார் அருளிய

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும், பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்,
பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்,

வேழ முகமும், விளங்குசிந் தூரமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்,
நான்ற வாயும் நாலிரும் புயலும்,
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்,

இரண்டு செவியும், இலங்குபொன் முடியும்,
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்,
— சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூடிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்

தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே,
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,
குருவடி வாகிக் குவலயந் தன்னில்

Koviloor Digital Library

திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,

ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்,
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்,
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து,
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி,

மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத் தங்கிசை நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை

விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி,

இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,

Koviloor Digital Library

சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்

தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,
என்னை அறிவித், தெனக்கருள் செய்து,
முன்னை வினையின் முதலைக் களைந்தே,

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்,
திருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந் தமளித்,

தல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக, விரைகழல் சரணே.

Koviloor Digital Library

உ

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

திருச்செந்தூர்

கந்தர்கலிவெண்பா

---

1 பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் — தேமேவு

2 நாதமும்நா தாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய் — ஆதிநடு

3 அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய் — வந்த

4 குறியுங் குணமுமொரு கோலமுமற்(று) எங்கும்
செறியும் பரம சிவமாய் – அறிவுக்கு

5 அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்(கு) எட்டா வடிவாய்த்- தனாதருளின்

6 பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய் – எஞ்சாத

7 பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்–தாரணியில்

8 இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்–முந்தும்

9 கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்–திரிகரணம்

10 ஆகவரும் இச்சை அறி(வு) இயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி – ஏகத்து

Koviloor Digital Library

11 உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்—இருள்மலத்துள்

12 மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தி அளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத் — தேகமுறத்

13 தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து — மந்த்ரமுதல்

14 ஆறத்துவாவு(ம்)அண்டத்(து)ஆர்ந்தஅத்துவாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பில் கூட்டுவித்து – மாறிவரும்

15 ஈரிரண்டு தோற்றத்(து)எழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ ருயிரத்துள் — தீர்வரிய

16 கன்மத்துக்கு(கு) ஈடாய்க் கறங்கும் சகடமும்போல்
சென்மித்(து) உழலத் திரோதித்து – வெந்நிரய

17 சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலும் — தர்க்கமிடும்

18 தொன்னூற் பரசமயந் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து — முன்னூல்

19 விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்து — அருள்பெருகு

20 சாலோக சாமீப சாப ரூமும்புசிப்பித்(து)
ஆலோகந் தன்னை அகற்றுவித்து — நால்வகையாம்

21 சத்தி நிபாதம் தருதற்(கு) இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப் — பெத்த

22 மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்(று) அருளி – உலவாது

23 அறிவுக்(கு) அறிவாகி அவ்வறிவுக்(கு) எட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்

Koviloor Digital Library

24 கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன்என்(று) ஓர்திருப்பேர் கொண்டு
— திருநோக்கால்

25 ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழு(ம்)அத்து வாக்கள் இருமூன்றும் பாழாக

26 ஆணவமான படலங் கிழித்(து) அறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்

27 அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது

28 தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கமற நின்றநிலை காட்டிப்—போக்கும்

29 வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்(து)உலவா இன்பம்—மருவுவித்துக்

30 கன்மமலத்தார்க்குமலர்க்கண்மூன்றுந்தாழ்சடையும்
வன்மழுவும்மானுமுடன்மால்விடைமேல்—மின்னிடத்துப்

31 பூத்த பவளப் பொருப்(பு)ஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த

32 கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய்(து)உள்நின்று
ஒருமலத்தார்க்(கு) இன்பம் உதவி – பெருகியெழு

33 மூன்றவத்தையும் யுங்கழற்றி முத்தருட னேபிருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத் — தோன்றவரும்

34 யான்எனதென்(று) அற்ற இடமே திருவடிபா
மோனபரா னந்தம் முடியாக — ஞானம்

35 திருவுருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா — இருநிலமே

36 சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே! —மின்னுருவம்

Koviloor Digital Library 3163

37 தோய்ந்தநவ ரத்நச் சுடர்பணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்

38 துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட

39 பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்(கு)
அருள்பொழியும் கண்மலர்ஈ ராறும்பருதி

40 பலவும் எழுந்துசுடர் பாலித்தால் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்

41 புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் விண்மலிதோள்

42 வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும் — எவ்வுயிர்க்கும்

43 ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும் — சூழ்வோர்

44 வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும் — விடுத்தகலாப்

45 பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் — நேசமுடன்

46 போகமுறும்வள்ளிக்கும்புத்தேளிர்பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் — தாகமுடன்

47 வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் — கொந்தவிழ்ந்த

48 வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூந்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் — ஆரமுதம்

49 தேவர்க்(கு) உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் — ஓவாது

Koviloor Digital Library

50 மாரி பொழிந்த மலர்க்கரமும் பூத்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் — மார்பகத்தில்

51 வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும் மொய்த்த

52 சிறுதொடிசேர் கையு(ம்)மணிசேர்ந்தடங்கையும்
கறுவுசமர் அங்குசஞ்சேர் கையும் — தெறுபோர்

53 அதிர்கேட கஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும் – முதிராத

54 கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் — பைம்பொற்

55 புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் — திருவரையும்

56 நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்(து) அணிந்த பரிபுரமும் — சோதி

57 இளம்பருதி நூறு யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவம் — உளந்தனிற்கண்(டு)

58 ஆதரிப்போர்க்(கு) ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே! – ஓதிய ஐந்து

59 ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே! — தாங்கரிய

60 மந்திரமே சோரியா வான்பதமே மாமுடிபாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்–பந்தனையால்

61 ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா–வைத்த

62 கலையே அவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்!–பலகோடி

Koviloor Digital Library

63 அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்(று)உட் கரணமாய்த்—தொண்டுபடும்

64 ஆவிப் புலனுக்(கு) அறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே! — மேவ

65 வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே! மெய்ஞ் ஞானம்
தரும் அட்ட யோகத் தவமே! – பருவத்து

66 அகலாத பேரன்(பு) அடைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும் — சுகலளிதப்

67 பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்கும் திருநாடும்—பாரின்பம்

68 எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர(வு)
அல்லா(து) உயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்

69 ஈறும் முதலுமகன்(று) எங்கு(ம்) நிறைந்(து) ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும்—ஏறுமதம்

70 தோய்ந்து களித்தோர் துதிக்கையினுற் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ

71 பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட்கட்டும்நறுந்தொடையும்–காரணத்துள்

72 ஐந்தொழிலும்ஓவா(து) அளித்துயர்ந்தவான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும் — சந்ததமும்

73 நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து

74 வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றேனே! – தேசுதிகழ்

Koviloor Digital Library

75 பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும்முக்கட்பரஞ்சோதி–ஆங்கொருநாள்

76 வெந்தகுவர்க்(கு) ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ(டு) அதோமுகமும்–தந்து

77 திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறிஆ(று) உய்ப்ப–விரிபுவனம்

78 எங்கும் பரக்க இமையோர்கண்(டு) அஞ்சுதலும்
பொங்குந் தழற்பிழம்பைப் பொற்கரத்தால்–அங்கண்

79 எடுத்தமைத்து வாயுவைக்கொண்(டு) ஏகுதிஎன்(று) எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்–அடுத்ததொரு

80 பூதத்தலைவ! கொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்ப–போதொருசற்(று)

81 அன்னவளுங் கொண்டமைதற்(கு)ஆற்றாள்சரவணத்திற்
சென்னியிற்கொண்(டு) உய்ப்பத் திருவுருவாய்–முன்னர்

82 அறுமீன் முலையுண்(டு) அழுதுவிளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்–குறுமுறுவற்

83 கன்னியொடுஞ் சென்(று)அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்(டு) அவ்வுருவம் ஆறினையும் தன்னிரண்டு

84 கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்–செய்ய

85 முகத்தில் அணைத்(து) உச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்–சகத்தளந்த

Koviloor Digital Library

86 வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்(து)
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே! – கிள்ளைமொழி

87 மங்கை சிலம்பின் மணிஒன் பதிற்றுஞ்ன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து–தங்கள்

88 விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருட்பாயுந் தார்வீரவாகு–நெருப்பிலுதித்(து)

89 அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்று கொணர்ந்(து)–
[எங்கோன்

90 விடுக்குதிஒன்(று) உய்ப்ப அதன்மீதிவர்ந்(து)
வண்டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா!– படைப்போன்

91 அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தொன்(று)
உகந்த பிரணவத்தின் உண்மை–புகன்றிலையால்

92 சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறைஇருத்துங்கோமானே!–மட்டவிழும்

93 பொன்னங் கடுக்கைப் புரிச டையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே! – கொன்னெடுவேல்

94 தாரகனும் மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே!–சீரலைவாய்த்

95 தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து–வெள்ளைக்

96 கயேந்திரனுக்(கு) அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற்புக்(கு)இமையோர்வாழச்–சயேந்திரனும்

97 சூரனைச்சோ தித்துவருகென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே!–காரவுணன்

Koviloor Digital Library

98 வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப் பானுப்

99 பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்!-சகமுடுத்த

100 வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்!-போரவுணன்

101 அங்கமிரு கூறாய் அடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்துதோன்றுதலும்-அங்கவற்றுள்

102 சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
நடாத்தும் இளையோனே!-மாறிவரு

103 சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே!-மூவர்

104 குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறை விடுத்தாட் கொண்(டு) அளித்த தேவே!
- மறைமுடிவாம்

105 சைவக் கொழுந்தே! தவக்கடலே! வானுதவும்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே!-பொய்விரவு

106 காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்-பூமருவு

107 கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்(து) இனிதிருந்து-மேன்மைபெறத்

108 தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே! -உள்ளமுவந்து

109 ஆறு திருப்பதிகண்(டு) ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!-நாறுமலர்க்

110 கந்திப் பொதும்பர்எழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே! - சந்ததமும்

Koviloor Digital Library

111 பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் பல்கோடி

112 பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசு(ம்)அடற்
பூதமும்தீ நீரும் பொருபடையும் — தீதகலா

113 வெவ்விடமும் துட்ட மிருகமுத லாம்எவையும்
எவ்விடம்வந்(து) எம்மை எதிர்த்தாலும்–அவ்விடத்திற்

114 பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் — கச்சைத்

115 திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா(று)
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் – விரிகிரணம்

116 சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற – வந்திடுக்கண்

117 எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்(து)
உல்லாச மாகஉளத்திருந்து – பல்விதமாம்

118 ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும் – ஓசை

119 எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)–ஒழுக்கமுடன்

120 இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்–தம்மைவிடுத்(து)

121 ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் — சேய

122 கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கும் முன்னின்(று) அருள்.

———

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை

திருப்பெருந்துறையில் அருளிச் செய்தது

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க [வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை யடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி

Koviloor Digital Library

சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்.

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

Koviloor Digital Library

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
48 பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
61 தாயில் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
66 பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே

ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
74 ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

Koviloor Digital Library

கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
78 காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே

ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
83 ஊற்றான உண்ணா ரமுதே உடையானே

வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே
89 நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
95 பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

24—6—76
25—6—76 **விநாயகர் அகவல்**

மகாவித்துவான், முதுபெரும்புலவர்

ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்

26—6—76
27—6—76 **கந்தர் கலிவெண்பா** (நூலையும் ஆசிரியரையும் பற்றிய முழுமையான கண்ணோட்டம்)

28—6—76 ,, **விரிவுரை**



பண்டித வித்துவான் சைவப்புலவர் தருமபுர ஆதீனப்புலவர்

க. சுந்தரமூர்த்தி, எம். ஏ. அவர்கள்

முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்

3163
R(Q231)

29—6—76
30—6—76 **சிவபுராணம்**

மகாவித்துவான், முதுபெரும்புலவர்

ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்